## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2015/2016 (ஜனவரி-பெப்ரவரி 2018)

## DTS 2133 Dramatic Literature and Play Production : focus on realistic theatre

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி–I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி-II இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவுசெய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

### பகுதி–I

01. (அ) அரங்கில் "யதார்த்த வாதம்" என்பது யாது?

(05 புள்ளிகள்)

(ஆ) அவை ஏன் முக்கியமாகிறது?

(05 புள்ளிகள்)

(இ) அது எவ்வாறு நாடகத்தில் புலப்படுத்தப்படுகின்றது.

(10 புள்ளிகள்)

02. "யதார்த்தவாத நாடக எழுத்துருவாக்கங்கள் நவீன அரங்கை மாற்றியது"

(அ) யதார்த்த வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு எழுந்த மேலைத்தேய நவீன நாடகங்கள் ஐந்து குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(ஆ) யதார்த்த வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு எழுந்த கீழைத்தேய நவீன நாடகங்கள் ஐந்து குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(இ) மேற்குறித்த இரு மரபுகளிலிருந்து கண்டு கொண்ட பிரதியில் ஒன்றினைத் தெரிவுசெய்து, யதார்த்தவாத நவீன உத்திகள் என நீர் காணும் விடயங்களைத் தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

03. யதார்த்தவாத நாடகங்களில் நடிப்பு ஒரு முக்கியமான விடயமாகும்.

(அ) யதார்த்த நடிப்பு! என்றால் என்ன? விளக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) யதார்த்தமில்லா நடிப்பு என்றால? என்ன விளக்குக.

(10 புள்ளிகள்)

(ம.ப.பா)

## பகுதி–II

04. "இலங்கை அரங்க வரலாற்றில் சமூக-அரசியல் விமர்சன நாடகங்களை எழுதியவர் என்ற பெருமை பேராசிரியர் க.கணபதிப்பிள்ளைக்கு உண்டு"

(அ) அவர் எழுதிய சமூக-விமர்சன நாடகங்கள் யாவை? அவற்றில் பொதுவான பண்புகளை நடிப்பு முறைக்கூடாக விளக்குக.
(15 புள்ளிகள்)

(ஆ) அவர் எழுதிய அரசியல் நாடகங்கள் யாவை? அவற்றின் பொதுவான பண்புகளை விளக்குக.
(15 புள்ளிகள்)

05. "நவீன யதார்த்த வகை நாடகங்களின் உருவாக்கம், வளர்ச்சி என்பவற்றில் ஹென்றிக் இப்ஸனின் பொம்மை வீடு (Doll's House) அன்ரன் செக்கோவின் செரித்தோட்டம் (The cherry orchard) எனும் நாடகங்கள் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தினவென்று அறிஞர் பலர் கூறுவர்" இக்கூற்றின் பொருத்தப்பாட்டை இரு நாடகங்களின் எழுத்துருவாக்கப் பண்பை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.
(30 புள்ளிகள்)

06. யதார்த்த நாடக படைப்பாக்கம் ஒன்றின் போது ஸ்ரெனிஸ்லவஸ்கியின் நடிப்பு உத்தி முறைகளைப் பிரயோகிக்க முடியுமா? கருத்துரை செய்க.
(30 புள்ளிகள்)

*****